# மாணவர்களும் 'ராக்கிங்'கும்

# விடுதலைப் புலிகளின் அறிக்கையும்

அண்மைக்காலங்களாக ராக்கிங் பற்றி பலவிதமான பேச்சுகளும் அடிபட்டுக்கொண்டிருந்தன. இந்த ராக்கிங் மாணவர்களிடையே பெரும் குழப்பத்தையும், அதேவேளை அது சம்பந்தமாக ராக்கிங் என்றால் என்ன? ராக்கிங்கின் வரைவிலக்கணம் என்ன என்றும் தீவிரமான குழப்பங்கள் நிலவி வந்தன. கடந்தவருடம் நாம் பல்கலைக்கழகத்திற்கு புதிய மாணவர்களாக வந்தோம். ராக்கிங்கை எதிர்த்து புதிய மாணவர்களே செயற்பட்டனர். இது உச்சக் கட்டத்தை அடைந்து மாணவர் மத்தியில் போராட்டமாக வளர்ந்துவந்தது. பெரிதும் சர்ச்சைக்குள்ளாகி இறுதியில் ராக்கிங்கை கைவிடுவது சம்பந்தமான முடிவுகள் எடுக்கப்பட்டன. இவை யாவும் மாணவர்கள் மத்தியில் **புரிந்துணர்வு** ரீதியாக எடுக்கப்பட்ட முடிவுகளே.

இந்த வேளையில்தான் விடுதலைப்புலிகள் தமது சுவரொட்டிகளை வெளியிட்டார்கள். ராக்கிங்கிற்கு வரைவிலக்கணம் இல்லாமலேயே அதைக் கைவிடும்படி கேட்டார்கள். அதுகூட பிரச்சனைக்குரியதாக இல்லை. ஆனால் அடுத்து அவர்கள், ராக்கிங் செய்வோர்மீது கடுமையான தண்டனை வழங்கப்படும் என எழுதியிருந்தார்கள். எமது இன்றைய போராட்ட சூழலில் போராட்டத்தில் முக்கியமான பங்கைவகிக்கும் விடுதலை ஸ்தாபனங்கள்கூட கருத்துக்களை திணிக்கும் விதத்திலும், மாணவர்களை சிந்திக்கத் தூண்டாமல் மந்தைகளாக்கும் விதத்தில் அறிக்கைகள் வெளியிடுவது மிகவும் கவலைக்குரியதாகும், அதே வேளை கண்டிக்கப்படவும் வேண்டியது.

யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்காக நிர்வாகம் இருக்கிறது. கடந்த காலங்களில் பிரச்சனைக்குரிய மாணவர்கள்மீது தண்டனையும் எடுக்கப்பட்டுள்ளது. இதைமீறி யாரும் தண்டனை பெறாமல் மறைமுகமாக இருந்தால், அது நிர்வாகத்திற்கு தெரிந்தும் மறைத்து இருந்தால் அது பிரச்சனைக்குரியதே. அவற்றையும்கூட மாணவர்கள் மத்தியில் நிச்சயமாக தீர்க்கப்பட்டிருக்க முடியும். நடந்த சம்பவங்களை மாணவர் மத்தியில் அம்பலமாக்கி, அதற்கான தீர்வுகளை நிர்வாகத்திடம் கோரியிருக்கலாம். யாழ் பல்கலைக்கழகத்தில் இன்னமும் நிர்வாகம் ஒன்று இருக்கிறது என்றே மாணவர்களாகிய நாம் நம்புகிறோம்.

அத்துடன் மாணவர்களாகிய நாம் போராட்டத்தில் எமது பங்களிப்பை மாணவர் அமைப்புகளினூடாகவும் தனித்தனியாகவும் செய்யவில்லையா? எமக்கு விடுதலை உணர்வுகள் இல்லையா? எதற்காகவும் நாம் எமது மாணவர்களிற்கே உரிய தனித்துவத்தை ஒருபோதும் இழக்கமாட்டோம் தற்போது நடக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் பற்றிய தவறான பிரச்சாரங்களையும் அவர்கள் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் எதிர்க்கும் நாம் இந்த விசயத்தில் குறிப்பிட்ட விடுதலை இயக்கத்தின் அணுகுமுறையை வன்மையாக கண்டிக்கிறோம்.

நாங்கள் சரியானவற்றை வரவேற்கிறோம் அதை நடைமுறைப்படுத்தியும் முன்னிற்கிறோம் எந்த ஒரு சரியான கருத்திற்கும் நாங்கள் எதிரானவர்களல்ல ஆனால் உங்களது இப்படியான அணுகுமுறைகள் பிரச்சனைகளை வீணே பெரிதுபடுத்துகின்றன. இதனால் எமது கல்வி பாதிக்கப்படுகிறது. இது எமக்கு மட்டும்தான் பாதிப்பல்ல, சமுதாயத்திற்கே பாதிப்பாகிறது.

ராக்கிங் பற்றிய பிரச்சனை மாணவர்களின் பிரச்சனை. மாணவர்களுக்கு இதைப்பற்றி சரியான அறிவை, தெளிவை ஊட்டும்வகையில் உங்கள் நடவடிக்கைகள் அமைந்திருந்தால் மாணவர்களே இதை இயல்பாக எதிர்த்திருப்பார்கள். இதுதான் வரவேற்கப்படக்கூடியது. இதைவிடுத்து மாணவர்கள் மத்தியில் உணர்வுபூர்வமாக தடுக்கப்படவேண்டிய விஷயங்களுக்கு உங்களது ஆயுதமும், அதிகாரமும் தீர்வை வழங்குமானால், பிரச்சனைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுமே ஒழிய நிரந்தரமாக அல்ல. எந்த ஒரு பிற்போக்கான கருத்துக்களையும் அடக்குமுறைகளையும் நாம் வன்மையாக எதிர்க்கிறோம், கண்டிக்கிறோம். 'துப்பாக்கிக்குழலில் இருந்துதான் அதிகாரம் பிறக்கிறது' என்பது உண்மை. ஆனால் துப்பாக்கிகளுக்கு மூளையே கிடையாது, அதை இயக்குவதற்குதான் மூளை வேண்டும் எமக்கிடையே நிகழும் சிறிய சிறிய பிரச்சனைகளுக்குக்கூட துப்பாக்கிகளா அதிகாரம் செலுத்தவேண்டும்?

மாணவர்களின் இந்தப் பிரச்சனைகளுக்காகப் போராடுவது மாணவர்களின் கடமையே. அவர்களுக்குள் போராட்டத்தின் மூலமே பல்வேறு சக்திகள் ஒன்றிணையமுடியும். ஒன்றிணைந்து பல்வேறுவிதமான பிற்போக்குத்தனங்களையும் எதிர்ப்பதற்கு அவர்களிடையே ஐக்கியம் மலரும்! மாணவர்களிடையே போராட்டமும் இருக்கும் ஐக்கியமும் இருக்கும். ஆனால் ஆயுதங்களோ மிரட்டல்களோ மட்டும்தான் இருக்காது. அவை உண்மையில் அவசியமற்றவையே!

இறுதியாக, இன்றைய சமுதாயத்தில் நிகழும் பிற்போக்குத்தனங்களை எதிர்ப்பது, புதியசமுதாயத்தை உருவாக்குவதுகூட மாணவர்களின் கைகளிலும் பெரிதும் தங்கியுள்ளது. எனவே மாணவர்களை மந்தைகளாக்காதீர். சிந்திக்க விடுங்கள்! மாணவர்களை முற்போக்கு சக்திகளாக வளர விடுங்கள்!

முதலாம் வருட விஞ்ஞான மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்